உ

சிவமயம்

பாட்டியல் வினுவிடை

உடுவில்

ச. ஜகநாதஐயர் அவர்கள் செய்தது

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை,
மல்லாகம்.

ஸ்ரீமுகவருஷ ஆவணி மீ

1933

உ

சிவமயம்

முகவுரை

தமிழ்ப் பாஷையிலுள்ள நூல்கள் செய்யுணடை வசனநடையென இருவகையாக வழங்கப்படும்.

அவற்றுள் முன்னாளிலே செய்யுணடையான நூல்களே பெரிதும் வழங்கி வந்தன. பிற்காலத்திலே வர வர வசனநடையாகவே பெரும்பாலும் நூல்கள் இய[illegible] வழங்கி வருகின்றன. இக்காலத்தி[illegible]ய்யுணடையான நூல்கள் இயற்றல் மிக அரிது.

செய்யு ளியற்றுதற்குக் கருவியாகிய நூல் காரிகையேயாம். காரிகையைப் படித் தறிந்த கவிஞர்களுக்குப் பிரபந்தங்களை இயற்றுங்கால் இன்றி யமையாததாய் உள்ள நூல் பாட்

டியலாகும். அது இலக்கண விளக்கப் பாட்டியல் சிதம்பரப் பாட்டியல் முதலியனவகளாகப் பலதிறப் பெயரோ டுள்ளது.

அந்நூல்கள் சூத்திர ரூபமாகக் கூறப்பட்டிருத்தலின் யாவரும் எளிதி னறிந்து கொள்ளும்படி மிகவும் இலகுவான வசன நடையில் வினாவிடையாக எழுதி இதனை வெளிப்படுத்தினேன்.

ஆதலின் யாவரும் இதிலுள்ள விஷயங்களை மாத்திரம் கிரகித்துக்கொண்டு இதனை அங்கீகரிக்கும்படி கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இங்ஙனம்.

ச. ஜகநாதஐயர்

உடுவில்

——:0:——

உ

கணபதிதுணை.

பாட்டியல் விறவிடை.

1. பாட்டியலாவது யாது?

அகலக் கவியி னிலக்கணமும், அறுவகைச் செய்யுளி னிலக்கணமுங் கூறுவது.

2. அறுவகைச் செய்யுளாவன யாவை?

நூலும், உரையும், பிசியும், முதுசொல் லும், மந்திரமும், குறிப்புரையுமாம்.

3. பாட்டியலிற் கூறப்படும் விஷயங்க ளெவை?

பாட்டினியல், நூலினியல், உரையினியல், பிசியினியல், முதுசொல்லியல், மந்திரவியல், குறிப்புரையியல், இருவகைமரபியல், வருணத்தி யல், புலவரியல், அவையினியல், அகலக்கவிகொ

டுப்போரியல், கொள்வோரியல் என்ற பதினான்கும் பிறவுமாம்.

4. பாட்டாவது யாது?

தொன்றுதொட்டு வழங்கும் யாப்பமைதி பெறச் செய்யும் பாவென்னும் உறுப்பாற் பொருந்தி வருவது.

5. அது எத்தனை வகைப்படும்?

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என நான்கு வகைப்படும்.

6. ஆசுகவியாவது யாது?

எழுத்து, சொல், பொருள், அணி, பாட்டு என்பவற்றிலொன்றாற் பாடுக என்றுவது, இவ்வெழுத்துமுதல் இவ்வெழுத்தீறாக அல்லது இச்சொன்முதல் இச்சொல்லீறாகப் பாடுகஎன்று வது ஒருவன்சொல்ல அதற்கிணையப் பாடுவது.

7. மதுரகவியாவது யாது?

சொல்லிலக்கணம் பொருளிலக்கணங்களிற் குறைவின்றி, தொடைபொருந்தி, தன்மையும், உவமையும், பொருளும் ஒன்றெனமாட்டிக்கூறும் உருவகம் முதலிய அணிகள் சேர்ந்து கேட்போர்க்கு இனிய ஓசையுடையதாய் வருவது.

8. சித்திரகவியாவது யாது?

மடக்கு, நாகபந்தம், கோமூத்திரி முதலியவைகளாம்.

9. அகலக்கவி (வித்தாரக்கவி) எத்தனைவகைப்படும்?

தொடர்நிலைச் செய்யுள், பலவடியான் நடக்குந் தனிநிலைச் செய்யுள் என இரண்டு வகைப்படும்.

10. தொடர்நிலைச் செய்யுள் எத்தனை வகைப்படும்?

பலவகைப்படும்.

11. அகலக் கவிக்குரிய பொருத்தங்கள் எத்தனை?

பாமகட்குந் தலைவனுக்குமுரிய பொருத்தம் பத்து.

12. அவை எவை?

மங்கலம், சொல், பால், வருணம், உண்டி, தானம், அக்கரம், நாள், கதி, கணம் ஆகிய பத்துமாம். இவைமுதற்சீரில் அமைதல் வேண்டும்.

13. மங்கல மொழிகள் யாவை?

சீர், பொன், பூ, மணி, திங்கள், பரிதி, கார், திரு, எழுத்து, கங்கை, யானை, கடல், நிலை, மா, உலகம், சொல், நீர், தேர், அமுதம், புகழ், நிலம், ஆரணம், கடவுள், திகிரி என்பனவும் இவற்றின் பரியாயங்களும், வாழி, மாலை, சங்கு, தார் முதலிய பிறவுமாம்.

14. சொற்பொருத்தமாவது யாது?

முதற்கூறும் மங்கலச்சொல் சிறந்தபொருருடைதலுடன், பலபொருடரல், வகையுளியுறல்,

சாறுதிரிதல் ஆகியமுக்குற்றங்களு மின்றி வருவது.

15. பாற்பொருத்தமாவது யாது?

குற்றெழுத்துக்கள் ஆண்பால்; நெட்டெழுத்துக்கள் பெண்பால்; ஒற்றும், ஆய்தமும் பேடு. ஆண்பாலுக்கு ஆண்பாலெழுத்துக்களும், பெண்பாலுக்குப் பெண்பாலெழுத்துக்களுங் கூறல்வேண்டும். மயங்கியுஞ் சிலவிடத்து வரலாம்.

16. வருணப் பொருத்த மாவது யாது?

அவ்வவ் வருணத்தார்க் குரிய அவ்வவ்வெழுத்துக் களாற் பாடுவது வருணப் பொருத்த மாகும்.

17. அந்தணர்க் குரிய எழுத்துக்கள் யாவை?

பன்னிரண் டுயிரெழுத்துக்களும், க, ங, ச, ஞ, ட, ண என்னு மாறு மெய்யெழுத்துக்களு மாம்.

18. அரசர்க் குரிய எழுத்துக்கள் யாவை?

த, ந, ப, ம, ய, ர என்ற ஆறுமாம்.

19. வணிகருக் குரிய எழுத்துக்கள் யாவை?

வ, ல, ற, ன என்னும் நான்குமாம்.

20. சூத்திரருக் குரிய எழுத்துக்கள் யாவை?

ழ, ள என்னும் இரண்டுமாம்.

21. இவ்வெழுத்துக்களை யார் யார் உண்டாக்கினர்?

பிரமா உயிர் பன்னிரண்டையும்,
அரன் க, ங க்களையும்,
அரி ச, ஞ க்களையும்,
முருகன் ட, ண க்களையும்,
இந்திரன் த, ந க்களையும்,
சூரியன் ப, ம க்களையும்,
சந்திரன் ய, ர க்களையும்,
இயமன் ல, வ க்களையும்,

வருணன் ழ, ள க்களையும்,
குபேரன் ற, ன க்களையும் உண்டாக்கினர்

22. அமுத எழுத்துக்கள் யாவை?

க, ச, த, ப, ந, ம, வ என்றமெய்களுடன் அ, இ, உ, எ என்றஉயிரெழுத்துக்கள் நான்குமாம்.

23. நச்செழுத்துக்கள் யாவை?

ய, ர, ல, ள என்னும் நான்கு மெய்யெழுத்துக்களும், இவற்றைச் சேர்ந்த ஆ, ஓ க்களும், ஆய்தமும், மகரக்குறுக்கமும், அளபெடையும் நச்செழுத்துக்களாம்; இவை முதன்மொழிக்குக் கூடா.

24. நச்செழுத்துக்கள் வேறும் எவ்விடத்து வரக்கூடா?

தசாங்கத் தயலினுஞ் சிலவிடத்து வரக்கூடா.

25. தசாங்கங்கள் யாவை?

மலை, நதி, நாடு, ஊர், தார், குதிரை, யானை, கொடி, முரசு, ஆணை என்பவைகளாம்.

26. தானப் பொருத்தமாவது யாது?

அ, ஆ பாலப்பொருத்தம்.
இ, ஈ, ஐ குமாரப்பொருத்தம்.
உ, ஊ, ஔ இராசப்பொருத்தம்.
எ, ஏ விருத்தப்பொருத்தம்.
ஒ, ஓ மரணப்பொருத்தம்.

தலைவன் பெயரின் முதலெழுத்தைப் பாலப்பொருத்தமாகக் கொண்டு பார்க்கும்போது முற்கூறிய எழுத்துப் பொருத்தம் மூன்றிலொன்று மங்கலமொழி முதலெழுத்திற் பொருந்துதலே தானப்பொருத்தமாகும்.

27. எழுத்துப் பொருத்தமாவது யாது?

முதற்சீரெழுத்துக்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பதாக வருதல் பொருத்த மாகும்; நான்கு, ஆறு, எட்டாக வருதல் பொருந்தாது.

28. நாட் பொருத்தமாவது யாது?

அந்த அந்த எழுத்துக்குரிய நாட்களை அறிந்து பொருத்த முடையவற்றை எடுத்த லாம்.

29. ஒவ்வொரு நாட்களுக்குமுரிய எழுத்துக் கள் யாவை?

1. கார்த்திகைக்குரியன....அ, ஆ, இ, ஈ.
2. பூராடத்திற்குரியன....உ, ஊ, எ, ஏ, ஐ.
3. உத்திராடத்திற்குரியன....ஒ, ஓ, ஔ.
4. திருவோணத்திற்குரியன....க, கா, கி, கீ.
5. திருவாதிரைக்குரியன....கு, கூ.
6. புனர்பூசத்திற்குரியன....கெ, கே, கை.
7. பூசத்திற்குரியன....கொ, கோ, கௌ.
8. ரேவதிக்குரியன....ச, சா, சி, சீ.
9. அச்சுவினிக்குரியன..சு, சூ, செ, சே, சை
10. பரணிக்குரியன....சொ, சோ, சௌ.
11. அவிட்டத்துக் குரியன....ஞ, ஞா, ஞி
12. சோதிக்குரியன....த, தா.
13. விசாகத்திற்குரியன....தி, தீ து, தூ, [தெ, தே, தை.

14 சதயத்திற்குரியன....தொ, தோ, தௌ
15. அனுடத்திற்குரியன....ந, நா, நி, நீ,
நு, நூ.
16. கேட்டைக்குரியன....நெ, நே, நை.
17. பூரட்டாதிக்குரியன....நொ, நோ, நௌ
18! உத்திரத்திற்குரியன....ப, பா, பி, பீ.
19. அத்தத்திற்குரியன....பு, பூ.
20. சித்திரைக்குரியன....பெ, பே, பை,
பொ, போ, பௌ.
21. மகத்திற்குரியன....ம, மா, மி, மீ, மு, மூ
22. ஆயிலியத்திற்குரியன....மெ, மே, மை.
23. பூரத்திற்குரியன....மொ, மோ, மௌ.
24. உத்திரட்டாதிக்குரியது....யா.
25. மூலத்திற்குரியன....யூ, யோ
26. ரோகணிக்குரியன....வ, வா, வி, வீ.
27. மிருகசீரிடத்திற்குரியன....வெ, வே,
வை, வௌ. என்பனவாம்.

30. நாட்பொருத்தம் எவ்வாறு கொள்ளல் வேண்டும்?

தலைவனுடைய பெயர் முதலெழுத்திற்குரிய நாண்முதலுள்ள இருபத்தேழு நாட்களையும் சென்மம், அநுசென்மம், உபசென்மம் என மூன்றிலும் ஒன்பது ஒன்பதாகப் பகுத்து அவற்றில் ஒன்று, மூன்று, ஐந்து, எழு என்ற எண்ணின் வந்த முச்சென்மநாட்களையும் விலக்கி மற்றவைகளைக் கொள்ளல் வேண்டும்.

31. இன்னும் எவ்வாறு கொள்ளலாம்?

தலைவனுடைய பெயர் நாட்கு மூன்றும் பரியாயத்தினின்ற மூன்று, ஐந்து, எழைப் பொருத்தமுடையவாக எடுத்தலும் தலைவனுடைய சென்ம நாட்டொடங்கிப் பார்த்தலும் உண்டு.

32. இன்னும் எவை விலக்கற்பாலன?

தலைவன் பெயரின் நாளிராசிக்கு எட்டாமிராசிக்குரிய நாட்களையும், எண்பத்தெட்டாங் காலுக்குரிய வைநாசிக நாளையும் விலக்கல் வேண்டும்.

33. கதியாவது யாது? முதற்சீருக்குரிய கதிகள் யாவை?

க், ச், ட், த், ப் என்னும் மெய்யெழுத்துக்களும், அ, இ, உ, எ என்னும் உயிரெழுத்துக்களுந் தேவர்கதி;

ங், ஞ், ண், ம், ந் என்னும் மெய்யெழுத்துக்களும், ஆ, ஈ, ஊ, ஏ என்னும் உயிரெழுத்துக்களும் மனிதகதி. இவ்விருகதிகளும் பொருத்தமுடையன.

34. நீக்கற்பாலனவாகிய கதிகள் யாவை?

ஒ, ஓ, ய, ர, ல, ழ, ற ஆகிய இவ்வேழும் விலங்கின் கதிகளாம்.

ஐ, ஔ, வ, ள, ன என்னும் ஐந்தும் நரகர் கதிகளாம். இவ்விரு கதிகளும் விலக்கப்பட்டன.

இவற்றுளொன்று மங்கலமொழி முதலெழுத்தாகவரின் எடுத்துங் கொள்ளலாம்.

35. கணப்பொருத்தமாவது யாது? அது எவ்வாறு கொள்ளப்படும்?

ஆதி, இடை, இறுதி, முற்று என்பவற்றுள் நேரசை, நிரையசைகள் வருமிடத்து:-

ஆதிநேர்—நீர்க்கணம்.
இடைநேர்—தீக்கணம்.
இறுதிநேர்—ஆகாயகணம்.
முற்றுநேர்—சுவர்க்ககணம்
ஆதிநிரை—சந்திரகணம்.
இடைநிரை—சூரியகணம்
இறுதிநிரை—வாயுகணம்
முற்றுநிரை—பூகணம்

இவற்றுள் முற்றுநேரும், முற்றுநிரையும், ஆதிநேரும், ஆதிநிரையும் பொருத்தமுடையன.

30. ஒவ்வொரு கணத்துக்குமுரிய பலன் யாது?

நீர்க்கணம்—சிறப்பு
தீக்கணம்—நோய்
ஆகாயகணம்—மரணம்
சுவர்க்ககணம்—சம்பத்து
சந்திரகணம்—ஆயுள்விருத்தி
சூரியகணம்—பலக்குறைவு

வாயுகணம்—செல்வநீக்கம்
பூகணம்—இலக்ஷ்மீகரம்

37. கணநாட்பொருத்தமாவது யாது?

வருணகணம்—சதயம்
சந்திரகணம்—மிருகசீரிடம்
அந்தரகணம்—புனர்பூசம்
வாயுகணம்—சோதி
சூரியகணம்—பூசம்
தீக்கணம்—கார்த்திகை
யமானகணம்—பரணி
பூமிகணம்—கேட்டை

இவற்றின்பலன்

நிலை, நீக்கம், சூலை, தீமை, கொலை, பிணி, நன்மை, இன்பம், என்பனவாம். இவற்றையறிந்து சேர்க்க

38. மங்கலச் சொல்லைக் குறித்து எவை வேறுபடலாம்?

சொற்பொருத்தம், உண்டிப் பொருத்தம், எழுத்துப்பொருத்தம் வேறுபடலாம்.

39 மங்கலச்சொல் வேறுபடினும் எவை வேறுபடலாகா?

தானப் பொருத்தம், நாட் பொருத்தம், கணப்பொருத்தம் வேறுபடலாகா.

40. தலைவன் பெயரைக் குறித்து மங்கலச் சொல் வேறுபடின் எவ்வாறு கூறலாம்?

மங்கலச் சொல்லுக்கு அடை கொடுத்தலும், பரியாயச் சொல்லாற் சொல்லலும், நடுவிலாவது இறுதியிலாவது கூறலுந் தகும்.

41. ஆசிரிய வுரிச்சீருக்குரிய கணப்பொருத்தம் யாது?

நேர்நேர்—சுவர்க்ககணம்
நிரைநேர்—சந்திரகணம்
நிரைநிரை—நிலக்கணம்
நேர்நிரை—நீர்க்கணம் எனப்படும்.

42. வேறும் எக்கணங்களாற் கூறப்படும்?

நேர்நேர் பிரமகணம்

நிரைநேர்—இலக்குமிகணம்
நிரைநிரை—சுரபிகணம்
நேர்நிரை—கருடகணம் எனவும்படும்

43. தசாங்கத்தினை எவ்வாறு கூறல்வேண்டும்?

ஒருசீராலேயே முடியப் பாடவேண்டும். பிரித்துக் கூறக்கூடாது. அவ்வாறு பிரிக்கின், அதனோடு புணருஞ் சொற்பெய ரிறுதியிற் றொகைகொடுத்து நச்செழுத்தகற்றிக் கூறல் குற்றப்படாது.

44. அகலக்கவி எவ்வாறு கூறப்படும்?

பத்துவகை யிலக்கணமு முடையதாய், மூவகைச்சீர்முதலாக அகலக்கவி கூறப்படும்.

45. முற்கூறிய பத்துப் பொருத்தங்களும் எவற்றைநோக்கிக் கூறப்பட்டன?

மங்கலமுஞ் சொல்லும் சொன்னோக்கியும், கணம் சீர்நோக்கியும், மற்றைய எழுத்துநோக்கியுங் கூறப்பட்டன:

46. தொடர்நிலைச் செய்யுட்கள் எவை?

1. பிள்ளைக்கவி
2. கலம்பகம்
3. பன்மணிமாலை
4. மும்பணிக்கோவை
5. அகப்பொருட்கோவை
6. தொகைநிலைச்செய்யுள்
7. இணைமணிமாலை
8. இரட்டைமணிமாலை
9. மும்மணிமாலை
10. நான்மணிமாலை
11. இருபாவிருபஃது
12. ஒருபாவொருபஃது
13. ஒலியந்தாதி
14. இன்னிசை
15. வருக்கமாலை
16. கைக்கிளை
17. மங்கலவள்ளை
18. இரட்டைமணிமாலை
19. நேரிசை
20. மெய்க்கீர்த்தி
21. காப்புமாலை
22. வேனின்மாலை
23. பல்சந்தமாலை
24. அங்கமாலை
25. வசந்தமாலை
26. நவமணிமாலை
27. பரணி
28. தசாங்கப்பத்து
29. பதிற்றந்தாதி
30. நூற்றந்தாதி
31. அட்ட மங்கலம்
32. அலங்காரபஞ்சகம்
33. ஊசல்
34. சின்னப்பூ
35. சதகம்
36. எண்செய்யுள்
37. ஐந்திணைச்செய்யுள்
38. நாழிகைவெண்பா
39. நானூற்பது
40. பயோதரப்பத்து
41. வின்முதலிய ஒன்பது விருத்தம்

42. காப்பியம் என்பனவாம்.

47. பிள்ளைக் கவியாவது யாது?

கடுங்கொலைநீக்கிக் கருணைதோன்றக் கடவுளைப் புகழ்ந்து கூறுங் கடவுட்காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறைமுழக்கல், சிற்றில் சிதைத்தல், சிறுதேருருட்டல் என்ற பத்துநிலமும் பெற்றுவருதல்.

48. பெண்பாற் பிள்ளைக்கவியாவது யாது?

கடவுட்காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் என்ற பத்தும்பெற்று வருதல். இது வகுப்பானுவது, அகவல் விருத்தத்தானுவது சுற்றமுறப் பாடப்படும்.

49 காப்புப் பருவத்துக்குக் கூறப்படுங் கடவுளர் யாவர்?

சங்குசக்கரதரனும், இரக்ஷகனும், இலக்குமிவாசனுமாகிய விஷ்ணுவும், கொன்றை, கங்

கையாதிய தரித்த சிவனும், உலகெலாமீன்ற வுமையும், அயனும், முகிலூர்தியும், விநயகரும், சுப்பிரமணியரும் சப்தமாதர்களும், இலக்குமியும், சரஸ்வதியும், பதினொருகோடியுருத்திரரும், பன்னிரண்டுகோடி சூரியரும், இரண்டுகோடி மருத்துவரும், எட்டுக்கோடி வசுக்களும், புஷ்பகவிமானத்துள்ள சந்திரன் குபேரன் என்னுமிவர்களும், காரிமுதலிய தேவர்களும் பிள்ளையைப் பாதுகாத்தற் பொருட்டு முறையே கூறப்படுவர்.

50 பிள்ளைக்கவி கொள்ளும் காலம்யாது?

பிறந்த மூன்றுமதிதொட்டு இருபத்தொரு மாதங்களுள் இரட்டித்த மாதத்துப் பூர்வபக்கத்துக் கொள்ளற்பாற்று.

51 பின்னும் எக்காலத்துக் கொள்ளலாம்?

மூன்றுமாண்டு, ஐந்தாமாண்டு, ஏழாமாண்டுகளினுங் கொள்ளலாம்.

52 காப்புச் செய்யுள் எத்தனை பாடப்படவேண்டும்?

ஒன்பது செய்யுள் அல்லது பதினொரு செய்யுள் பாடப்படவேண்டும்.

53 கலம்பகமாவது யாது?

ஒருபோகு, வெண்பா, கலித்துறை என்னுமிவற்றை முதற்கண்ணுடைத்தாய், புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னுமிப் பதினெட்டுறுப்புக்களுமிடையயவுடைத்தாய், மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னுமிக் கவிக்கூறுபாடுகளையுடைத்தாய், இடையே வெண்பா, கலித்துறைகளையு முடைத்தாய் அந்தாதித் தொடையான் முற்றும்வர முதலுமிறுதியும் மண்டலித்துப் பாடப்படுவது.

54 கலம்பகத்துக் குரிய பாட்டு வரையறை யாவை?

தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், அமைச்சருக்கு எழுபதும், வணிகருக்கு ஐம்பதும், வேளாளருக்கு முப்பதுமாக வருவனவாம்.

55 பன்மணி மாலையாவது யாது?

கலம்பகத்துக் குரிய உறுப்புக்களுள் ஒருபோகும், அம்மானையும், ஊசலு மாய மூன்றுமின்றி மற்றைய யாவும் வருமாறு பாடப்படுவது.

56 அகப்பொருட் கோவையாவது யாது?

இருவகைப்பட்ட முதற் பொருளும், பதினான்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்து வகைப்பட்ட உரிப்பொருளும், பொருந்தி, கைக்கிளை முதல் அன்புடைக் காமமாகிய களவொழுக்கம் கற்பொழுக்கத்தினையுங் கூறலே எல்லையாகக்

கொண்டு, கட்டளைக் கலித்துறை நானூறாக, திணை, கைக்கோள், கூற்று, கேட்போர், இடம், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள்வகை, துறை என்னும் அகப்பாட்டு றுப்புப் பன்னிரண்டுந் தோன்றப் பாடுவதாகும்

57. தொகைநிலைச் செய்யுளாவது யாது?

நெடுந்தொகை, குறுந்தொகை, கலித்தொகை முதலிய பலவுந் தொகைநிலைச் செய்யுட்களாம்.

58. இணைமணிமாலையாவது யாது?

வெண்பாவும், அகவலும்; வெண்பாவும், கலித்துறையுமாகவர இரண்டிரண்டாக விணைத்து வெண்பாவகவ லிணைமணிமாலை, வெணபாக் கலித்துறை யிணைமணிமாலை என நூறு நூறு அந்தாதித் தொடையான் வருமாறு பாடுவது

59. இரட்டைமணிமாலையாவது யாது?

வெண்பாவுங் கட்டளைக் கலித்துறையும் முறையே இருபது அந்தாதித் தொடையான் வரப் பாடுவதாகும்

60. மும்மணிமாலையாவது யாது?

வெண்பாவும், கலித்துறையும், அகவலும் முறையே முப்பதுவர அந்தாதித்தொடையாற் பாடுவதாகும்

61. நான்மணிமாலையாவது யாது?

வெண்பாவும், கலித்துறையும், அகவலும், பின்னும் முன்னும் ஒன்றிய விருத்தமும் நாற்பதுவர அந்தாதித்தொடையாற் பாடுவதாகும்

62. இருபா விருபஃதாவது யாது?

பத்து வெண்பாவும், பத்தகவலும், அந்தாதித் தொடையான் இணைந்து இருபதுவருவதாகும்

63 ஒருபா வொருபஃதாவது யாது?

அகவல், வெண்பா, கலித்துறை என்ப வற்று ளொன்றான் ஒரு பத்றுப்பாட்டு அந் தாதித் தொடையான் வருவதாகும்

64 ஒலியந்தாதி யாவது யாது?

பல சந்தங் கூடிய பதினாறு கலைவகுப்பா ளய முப்பது செய்யுள் அந்தாதித் தொடை யான் வருவதாகும்

65 பெயரின்னிசை, ஊரின்னிசைக ளாவன யாவை?

பாட்டுடைத் தலைவன் ஊரினையும் பெய ரினையுஞ்சார இன்னிசை வெண்பாவால், தொண் ணூறு, எழுபது, ஐம்பது பாடின் பெயரின் னிசையும், ஊரின்னிசையுமாகும்.

66. வருக்கமாலையாவது யாது?

மொழிக்கு முதலாம் வருக்கவெழுத்துக்கு ஒவ்வொரு கவி கூறுவதாகும்

67. கைக்கிளையாவது யாது?

ஒருதலைக் காமத்தினை ஐந்து விருத்தத்தாற் கூறுவதாகும்.

68. மங்கல வள்ளையாவது யாது?

உயர்ந்தகுலப் பெண்களை வெண்பாவொன்பதால் வகுப்புறப் பாடுதலாகும்

69. வேறுவகை இரட்டைமணி மாலையாவது யாது?

வெண்பா பத்தும், விருத்தம் பத்தும் அந்தாதித் தொடையான் முறையே இருபது வரின் இரட்டைமணிமாலையாகும்

70. நேரிசையாவது யாது?

இன்னிசை போலத் தலைவனது பெயரூரினைச் சார்ந்து வரத் தொண்ணூறும், எழுபதும், ஐம்பதும் பாடின் பெயர்நேரிசையும், ஊர்நேரிசையுமாகும்.

71. மெய்க்கீர்த்தியாவது யாது?

சொற்சீரடியான் காரியப்புகழை மன்னரிடத்துக் கூறுதலாம்.

72. காப்புமாலையாவது யாது?

காத்தலாக மூன்று கவியாவது, ஐந்து கவியாவது, எழுகவியாவது புாடுவதாகும்

73. வேனின்மாலையாவது யாது?

இளவேனிலையும் முதுவேனிலையுஞ் சிறப்பித்துப் பாடுவதாம்

74. பல்சந்தமாலையாவது யாது?

பத்துச் செய்யுள் முதல் நூறுசெய்யுளிறுதியாகக் கூறிய பத்துப்பத்தாகவரும் பத்துச் சந்தங்களாற் கூறுவதாகும்.

75. அங்கமாலையாவது யாது?

ஆணுக்காவது பெண்ணுக்காவது கூறும் அவயவங்களைத் தொகுதியாகிய அவயவங்களு

டனே வெண்பாவினுலாவது, வெளிவிருத்தத்தா
ஞவது அந்தாதித் தொடையாற் பாடுவதாகும்

76. வசந்தமாலையாவது யாது?

தென்றலை வருணித்து அந்தாதித் தொடையாற் பாடுவதாகும்

77. நவமணிமாலையாவது யாது?

வெண்பாமுதல் வேறுனபாவும் பாவினமுமாக ஒன்பது வர அந்தாதித் தொடையாற் பாடுவதாகும்

78. பரணி கொள்ளற்குரியார் யாவர்?

போரின்கண் ஆயிரம் யானை அழிய வென்ற வீரனே கொள்ளத் தக்கவனுவான்

79. பரணியாவது யாது?

கடவுள் வாழ்த்தும், கடைதிறப்பும், பாலைநிலமும், காளிகோயிலும், பேய்களோடு காளியும், காளியோடு பேய்களுஞ் சொல்லத் தான்

கருதிய தலைமகனுடைய சீர்த்தி விளக்கலும், அவன்வழியாகப் புறப்பொருடோன்ற வெம்போர் வழங்க விரும்பலும் என்றிவைகள் அளவடியா னீரடிப் பஃறொழிசையாகப் பாடப்படும்

80 தசாங்கப் பத்தாவது யாது?

நேரிசை வெண்பாவினாலே அரசனுடைய தசாங்கத்தினைப் பத்துச் செய்யுளாற கூறுவதாகும்

81 பதிற்றந்தாதியாவது யாது?

பத்துவெண்பாவும், பத்துக் கலித்துறையும் பொருளுறப் பாடுவதாகும்

82 நூற்றந்தாதி யாவது யாது?

வெண்பா நூறு, கலித்துறை நூறு அந்தாதித் தொடையாற் பாடப்படுவ தாகும்

83 அட்டமங்கல மாவது யாது?

கடவுளைக் காக்கும்படி எட்டுச் செய்யுள் ஆசிரிய விருத்தத்தாற் கூறுவதாகும்

84 அலங்கார பஞ்சக மாவது யாது?

வெண்பாவும், கலித்துறையும், அகவலும் விருத்தமும், சந்த விருத்தமு மாகிய இவை யைந்தினையும் அந்தாதி யாகப் பாடுதலாகும்

85 ஊசலாவது யாது?

ஆசிரிய விருத்தத்தா னவது, கலித்தா ழிசையா னவது சுற்றத்தாரோடும் பொலிவ தாகக் கூறலாகும்

86 சின்னப்பூ வாவது யாது

நேரிசை வெண்பாவினாலே தசாங்கத்தினை நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப் பது என்னும் எண்படப் பாடுவ தாகும்.

87 சதகமாவது யாது?

அகப்பொருளா னவது புறப் பொருளா னாது நூறு கவி ஒன்றைப் பற்றிப் பாடுவ தாகும்

88 எண்செய்யுளாவது யாது?

பாட்டுடைத் தலைவனுடைய ஊரையும், பெயரையுங் குறித்துப் பத்து முதல் ஆயிரம் வரும் எண்களாற் பாடுதல். அவ்வவ் வெண்ணாற் பெயர்பெற்று நடக்கும்

89 ஐந்திணைச் செய்யுளாவது யாது?

புணர்தல் முதலிய ஐந்தும் நிகழும் குறிஞ்சி முதலிய ஐந்திணைகளையுங் கூறுதலாம்

90 நாழிகை வெண்பாவாவது யாது?

தேவரிடத்தும், அரசரிடத்தும் நிகழுங் காரியம் நாழிகையளவிற் றோன்றி நடப்பதாக முப்பத்திரண்டு வெண்பாக் கூறுதலாம்.

91. நானாற்பதாவது யாது?

காலம், இடம், பொருள் என்பனபற்றி யாற்பது வெண்பாக் கூறுதலாகும்

92. பயோதரப் பத்து, நயனப் பத்தாவன யாவை?

பயோதரம், நயனம் என்பனவற்றைப் பத்துப் பத்துச் செய்யுள்களாற் பாடுதலாகும்

93. வின்முதலிய ஒன்பதுவகை விருத்தமாவதுயாது?

வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை என்பனவற்றைப் பத்துப் பத்து விருத்தங்களாற் கூறுவது அவ்வப்பெயர் பெற்று வரும்

94. காப்பியங்கள் எத்தனை வகைப்படும்?

பெருங்காப்பியம், சிறுகாப்பியம் என இரண்டு வகைப்படும்

95. பெருங் காப்பியமாவது யாது?

வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்பவற்றுள் ஒன்றை முன்னுடையதாய், அற முதலியவற்றைக் கொடுக்கும் பிரயோசனமுடையதாய், மலை, கடல், நாடு, நகர், பருவம், இருசுடர்த் தோற்றம் என்றவிவற்றை அலங்கரிப்

பதாய் மணமுடித்தல், முடிகவித்தல், பொழில் விளையாட்டு புனல் விளையாட்டு, சிறுவரைப் பெறுதல், புலவியிற் புலத்தல்; கலவியிற் களித்தல் என்றவிவற்றை யுடையதாய், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி, சந்தி முதலிய தொடர்புடையதாய், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் முதலிய பாகுபாடுடையதாய் வருவதாகும்

96. சிறுகாப்பியமாவது யாது?

அறமுதலிய நான்கினுட் சில குறைந்து வருவதாகும்

97. தனிநிலைச் செய்யுளின் பாகுபாடுகள் யாவை?

வளமடல், உலாமடல், உலா, அநுராகமாலை, மெய்க்கீர்த்திமாலை, புகழ்ச்சிமாலை, நாமமாலை, தாரகைமாலை, உற்பவமாலை தாணைமாலை, வரலாற்றுவஞ்சி, செருக்களவஞ்சி, பலபொருள் வஞ்சி, குளமகன், பாதாதிகேசம், கேசாதிபா

தம், யானைத்தொழில், கூத்தர் முதலோரை யாற்றுப்படுத்தல், தூது

98. வளமடலாவது யாது?

அறம் பொருள் வீட்டைக் கூறுது, பெண் பாலநுபவிக்கப்படு மின்பத்தைப் பற்றிக் கலிவெண்பாவினுலே தலைவனுடைய இயற்பெயரெதுகையாகவே பொருண்முழுவதும் பாடுதலாகும்

99 உலாமடலாவது யாது?

கனவின்கண் ணொருத்திமாட் டின்ப மநுபவித்தா னொருவன் நனவின்கண் அவள் காரணமாக மடலூருவேன் என்று கலிவெண்பாவினுலே கூறுத லாகும்.

100 உலாவாவது யாது?

இளமை பொருந்திய தலைவனைக் குலம், குடி, மங்கலம், பரம்பரை என்பவற்ருல் இன்ன

னென்று தோன்றும் வகை கலிவெண்பாவி ஞலே கூறி ஆபரண வலங்கார மிகும் பெண் கள்செறி வீதியிலே அவன் பவனிவர எழ் பருவப் பெண்கள் கண்டு தொழப் பாடுவதா கும்

101 எழ்பருவ மாதர்கள் யாவர்?

ஐந்தாண்டுமுதல் எழாண்டு வரையுளார் பேதையர், எட்டாண்டு முதல் பன்னீராண்டு வரையுளர் பெதும்பையர், பதின்மூன்றுமாண் டினர் மங்கையர், பதினன் காண்டுமுதல் பத் தொன்ப தாண்டுவரையர் மடந்தையர், பத் தொன்பதாண்டுமுதல் இருபத்தா றுண்டு வரை யர் அரிவையர், இருபத்தா றுண்டு முதன் முப் பத்திரண் டாண்டுவரையினர் தெரிவையர், முப் பத்திரண்டு வருடமுதல் நாற்பதாண்டினர் பேரி ளம் பெண்ணினர் எனவறிக

102. அநுராக மாலையாவது யாது?

கனவிலே ஒருத்தியைக் கண்டு செய்த ஐம்புல நுகர்ச்சியையும், நனவிலே பாங்கனுக்கு நேரிசைக் கலிவெண்பாவினலே கூறலாவது

103. மெய்க்கீர்த்தி மாலையாவது யாது?

கட்டுரைச் செய்யுளாற் பரம்பரையாக வந்த கீர்த்தியை அழகுபெறக் கூறுவது

104. புகழ்ச்சிமாலை யாவது யாது?

அகவலடியும், கலியடியும், வந்து மயங்கிய வஞ்சிப்பாவினலே வியக்கற் பாலராகிய பெண்களது சிறப்புக் கூறுவது

105. நாம மாலையாவது யாது?

அகவலடியும், வஞ்சியடியும் வந்து மயங்கிய வஞ்சிப் பாவினலே ஆண்மகனைப் புகழ்ந்து கூறுவது

106. தாரகை மாலையாவது யாது?

வகுப்பினுலே கற்புறுமகளி ரிலக்கணங்க ளைக் கூறுவது

107. உற்பவ மாலையாவது யாது?

மாயவனுடைய பத்துப் பிறப்பினையும் அகவல் விருத்தத்தினுற் கூறுவது

108. தானை மாலையாவது யாது?

அகவற் பாவினுலே முன்னர்க் கூறப்ப டும் கொடிப்படையைக் கூறுவது

109. வரலாற்று வஞ்சியாவது யாது?

அகவற்பாவினுலே போர்க்களத்திற் செல் லும் படையெழுச்சியைப் பற்றிக் கூறுவது

110. செருக் களவஞ்சியாவது யாது?

அகவற் பாவினுலே செருக்களத்தினைப் பற்றிக் கூறுவது

111 பொருள் வஞ்சியாவது யாது?

அகவற் பாவினுலே புறத்திணைக் கட்டுறுத்திக் கூறும் துறைப்பொருளை விரித்துக் கூறுவது

112. குழமகனுவது யாது?

மங்கையர் தங்கையிற் கண்ட இளமைத் தன்மையுடைய குலமகளைப் பற்றிக் கூறுவது

113 பாதாதிகேசமாவது யாது?

கலி வெண்பாவினுலே பாதமுதல் முடிவரையுங் கூறுவது

114. கேசாதி பாதமாவது யாது?

முடிமுதல் அடிவரையுங் கலிவெண் பாவினுலே கூறுவது

115. யானைத் தொழிலாவது யாது?

கிரிசரம், நதிசரம், வனசரமாகிய நிலம், அவயவங்களி னழகு, ஏழுமுழமுயரம், தருண

வயது, பிறந்த நிலத்தான் வீரமுறுங் குல நன்மை, ஒன்பதுமுழ நீளமும் மூப்பத்திரண்டுமுழச் சுற்றமுடைய இலக்கணம், மும்மதங் கோடல், அடுத்தபோதிற் கோறல், அரசனைக் கண்டறிதல் இவைகளை வஞ்சிப் பாவினாலே தொடுத்துக் கூறுவது

116 ஆற்றுப்படையாவது யாது?

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என்பவர் தாம்பெற்ற பெருவளம் பெறாது நிற்போரைப் பெறுமாறு ஆற்றுப் படுத்தலை ஆசிரியத்தாற் கூறுவது

117 தூதாவது யாது?

கலிவெண்பாவினாலே பாணன்முதற் பாங்கனீறாகிய உயர்திணைப் பொருளையும், அன்ன முதலிய அஃறிணைப் பொருளையும் இளையகலம், முதியகலம் இவற்றின் துனி நீங்கற்கு விடுப்பதாகப் பாடுவது

118 அகலக்கவிக்குரிய சிறப்புவிதிகள் யாவை?

அகப்பொருள் கூறும் அகவலுள் வஞ்சியடி வரலாகா; ஏனைப் பொருளிலே கலி வாரா; வஞ்சிப்பா தனியே வரும் என்பவைகளாம்.

119 அகலக்கவிக்குப் பெயர் எவ்வாறு கொள்ளப்படும்?

பொருள், இடம், தொழில், உறுப்பு, அளவு, செய்தோன், செய்வித்தோன் என்பவற்றால் கொள்ளப்படும்

120 நான்கு பாவிற்கு முரிய வருணம் யாவை?

வெண்பா....அந்தணர்
அகவற்பா....அரசர்
கலிப்பா....வைசியர்
வஞ்சிப்பா....சூத்திரர்

121 நான்குபாவிற்கு முரிய திணைகள் யாவை?

வெண்பா....முல்லை
அகவற்பா....குறிஞ்சி

கலிப்பா....மருதம்
வஞ்சிப்பா....நெய்தல் ஆகும்.

122. நான்குபாவிற்கும் நிறம் யாவை?

வெண்பா....வெள்ளை
அகவற்பா....செம்மை
கலிப்பா....கருமை
வஞ்சிப்பா....பொன்மை

123. வெண்பாவிற்குரிய நாட்கள் யாவை?

கார்த்திகைமுதல் ஆயிலிய மீறாகிய எழு நாட்களுமாம்

124. ஆசிரியப்பாவிற்குரிய நாட்கள் யாவை?

மகம் முதல் விசாகம்வரை எழு நாட்களுமாம்

125. கலிப்பாவிற் குரிய நாட்கள் யாவை?

அநுஷம் முதல் அவிட்டம் வரை எழு நாட்களுமாம்

126. வஞ்சிப்பாவிற்குரிய நாட்கள் யாவை?
சதயம் முதல் பரணிவரை ஆறுநாட்களு மாம்

127. வெண்பாவிற்குரிய இராசிகள் யாவை?
கற்கடகம், விருச்சிகம், மீனம் மூன்று மாம்

128. அகவற்பாவிற்குரிய இராசிகள் யாவை?
மேடம், சிங்கம், தநு மூன்றுமாம்

129. கலிப்பாவிற்குரிய இராசிகள் யாவை?
மிதுனம், துலாம், கும்பம் மூன்றுமாம்.

130. வஞ்சிப் பாவிற்குரிய இராசிகள் யாவை?
இடபம், கன்னி, மகரம் மூன்றுமாம்

131. வெண்பாவிற்குரிய கோள்கள் யாவை?
திங்கள் வியாழம் இரண்டுமாம்.

132. அகவற் பாவிற்குரிய கோள்கள் யாவை?
சூரியன், செவ்வாய் இரண்டுமாம்.

133 கலிப் பாவிற்குரிய கோள்கள் யாவை?

புதன், சனி இரண்டுமாம்

134 வஞ்சிப் பாவிற்குரிய கோள்கள் யாவை?

சுக்கிரன், பாம்பு இரண்டுமாம்

135. நான்கு பாவிற்கும் பூ, சாந்து, கலை, அணி என்பன யாவை?

வெண்பாவிற்கு வெள்ளை, அகவற்பாவிற்கு சிவப்பு, கலிப்பாவிற்கு கருமை, வஞ்சிப்பா விற்கு பொன்மையுமாம்

136. இயற்பெயர்க்கண் விலக்கப்படும் ஆனந் தங்கள் யாவை?

எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொரு ளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என்னும் ஆறுமாம்

137. உரைச் செய்யுளாவது யாது?

சொற்சீரடியானிற்ற சூத்திரமாம்

138. அது எத்தனை வகைப்படும்?

ஒருபாட்டின் இடையிடை கொண்டுகிற்குங் கருத்தான் வருவனவும், பாவின்றிச் சூத்திரத் துக்குப் பொருள் எழுதுவன போல்வனவும், பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து சொல் லுவனவும், பொய்யெனப்படாது மெய்யெனப் பட்டு நகுதற்கேதுவாகுந் தொடர்நிலையுமாம்

139. பிசியாவது யாது?

ஒப்புமையோடு பொருந்திவரும் உவமச் சொல் லானும், ஒன்று சொல ஒன்று தோன்றுதல் உடையவாகச் சொல்லுஞ் சொல்லானும் இரு வகைப்படும்

140. ஒப்பொடு புணர்ந்த உவமமாவது யாது?

பிறைகவ்வி மலைநடக்கும் என்பது யானை என்பதை உணர்த்துவதாம்

141. தோன்றுவது கிளந்த துணிவாவதுயாது?

நீராடான் பார்ப்பா னிறஞ்செய்யா னீரா டி னூராடு நாட்டிற் காக்கை. இது நெருப் பென்றாற் போல்வதாம்

142. முதுமொழியாவது யாது?

நுண்ணிய பொருளுடைமையும், சுருக்க மும் எல்லாச் சமயத்தாரானுங் கூறும் பொ ருள்களிற் றான் சென்று விளங்குதலுடைமை யும், எளிமையும், என்ற இந்நான்குந் தோன்ற எப்பொருளுந் தன்னகத் தடங்கத் தான்மேற் பட்டுப் பிரதிஞ்ஞை மாத்திரத்தாற் றேன்றும் காரகமாக வரும் உதாரணம், உபநயம், நிகம னம் என்பன கொண்டுவரும் ஏதுப்பொருளைக் கருதியனவேயாம்

143. மந்திரச் செய்யுளாவது யாது?

நிறைமொழி மாந்தர் ஆணையிற் கூறிய மறைமொழியாம்

144. குறிப்புமொழியாவது யாது?

எழுத்துச் சொற்களோடு சேராது பொருட்குப் புறத்தேயுள்ளதாம்

145. கவியாவான் யாவன்?

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும் நால்வகைப் பாக்களையும் பாடுவோன்

146. கமகனாவான் யாவன்?

நிறைந்த கல்வியினாலும், நிறைந்த அறிவினாலும் முன்னோர் சொன்ன நூற்பொருளை விரித்துக்கூற வல்லவனாம்

147. வாதியாவான் யாவன்?

ஏதுவும், மேற்கோளுமாகிய விரண்டற்கும் திட்டாந்த முதலியன எடுத்துக்காட்டித் தன் கோட்பாட்டினை நிறுத்திப் பிறர் கோட்பாட்டினை மறுக்க வல்லவனாம்

148. வாக்கியாவான் யாவன்?

அறமுதலிய நாற்பொருளையும், சமமாகக் கேட்போர் விரும்ப், செஞ்சொல்லினாலே வீடு

றுமாறு கருணை கொண்டு கூறுபவனும்

149. சோரகவியாவான் யாவன்?
ஒருவனுக்குப் பாடிய செய்யுளை வேறொருவனுக்குச் சொல்லுபவன்

150. சாத்துக் கவியாவான் யாவன்?
ஒருவன் பாடிய செய்யுளிசைக் கேற்பப் பாடுவோன்

151. பிள்ளைக் கவியாவான் யாவன்?
மேலோர் பாடிய யாப்பிலுள்ள சிலசொற்களைக் கொண்டு செய்யுள் செய்பவனும்

152. வெள்ளைக் கவியாவான் யாவன்?
மேலோர் பாடிய யாப்பிலுள்ள சொற்களால் தான் பாடுபவன்

153. நல்லவை யாவை?
அறுவகை உட்பற்றையு மடக்கி, அறுபத்து நான்கு கலைகளையும் உணர்ந்து, அநுற் புவியிற் பிறத்தற் பயனுன புகழ்பெற்றவர் இருக்கும் அவையாம்

154. நிறையவை யாவை?

அடக்கம், வாய்மை, நடுநிலைமைகளையுடையவர் கூடி, மாட்டாதார் கவியரங்கேற்று, அவர் குற்றத்தைப் போற்றி, அவர்களை வல்லவராக்கி வினவிக் கேட்பவர் இருக்கும் அவையாம்

155. ஓரையாவது யாது?

அகர, இகர, உகர, எகர, ஒகரங்களை இனவெழுத்துக்களுடன் சேர்த்தி ஐவகையாக்கிச் சூரியோதய முதலுள்ள பகலை ஆறுறு நாழிகைகளாக வகுத்துச் சொல்வது. அவற்றுள் முதனின்ற மூன்றோரைகளுள் அகலக்கவியைப் புனைந்து இன்பமுறுக

156. அகலக்கவி பாடுபவன் யாவன்?

குலமுதலிய எண்வகை உறுப்பும் பொருந்தி, நாற்கவியும் பாடுந் தன்மையனாய் முத்தமிழ் வழக்கினை முற்ற வுணர்ந்து, இருபது வயது முதல் எழுபது வயதுக்கு மேற்படாத தன்மையை யுடையவனும்

157. அகலக்கவினையக் கொள்பவன் யாவன்?

நற்புலவன் செய்த செய்யுளை உயர்ந்த சபையில் தீபத்துடன் மங்கலம் மிக, பிராமணர் ஆசிகூற, மாலைதூங்க, வாத்திய கோஷஞ் செய்ய, மாதர்கள் பல்லாண்டு பாட, தான் வெண்டுகில் வெண்மாலைகள் புனைந்து, ஒரு தவிசினிருந்து; அவ்வாறே புலவனையு மிருத்தி, எட்டுத்திக்கினரும் வாழ்த்தெடுப்பப் பாமாலைசூடி மருதநிலத்தூர், ஆபரணம், பொன், யானை, தேர், குதிரை, இவற்றைப் புலவர்க்குக் கொடுத்து அவர்பின் ஏழடிபோய் அவரை வழிவிட்டு மீள்பவனும்

158. அகலக் கவியைக் கொண்டோர் பயன் யாவை?

நல்லிலக்கண முடைய அகலக் கவியைக் கொண்டோர் புகழானும், உருவத்தானும் நிறைமதியும், குணஞாயிறும் இவனும் என்று கூறும்படி சிறப்புற்றுப் புகழுடம்பான் நிலைபெற்றிருப்பார்

பாட்டியல் விறைவிடை முற்றிற்று.